# ஜோக்ஸ்

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 09:58:50 +05'30'

“[illegible] பெண்ணு[illegible]பயம் இல்லாத[illegible]ம்,உன் காதலிகிட்டே இருக்கிறதா சொன்னியே, அப்படி என்னடா [illegible] இருக்கு?”
“இதுதான் சமயம்னு நைஸா தெரிஞ்சுக்கலாம்னு பார்க்கிறியா?”
=====
ஏன் சார்! அடிக்கடி உங்க பேர் மாறுது?
என்ன செய்யறது! அடிக்கடி என் பெயரை மாத்தி வெச்சிக்கிறேன்னு பந்தயம் கட்டிடறேனே....
=====
மீரா : தந்தத்தை எடுக்கும் போது யானை எப்படி வருத்தப்படும்?
வீரா : தெரியலையே
மீரா : I worry Ivory ன்னுதான் வருத்தப்படும்.
=====
தம்பி: ஒரு சின்ன முள் குத்திவிட்டது. என்ன செய்யலாம்
அண்ணன்: இன்னொரு பெரிய முள்ளாகப் பார்த்துக் குத்திக்கொண்டு வா. மணி பார்க்கலாம்.
=====
“நரகாசுரனைக் கொன்றது யாரு?...”
“அதைப் போலீஸ் பார்த்துக்குவாங்க சார்... நமக்கெதுக்கு வம்பு...!”
=====
“ஏண்டா, எப்பொழுதும் உன் தங்கையை ‘நீங்க ஒரு பாட்டு பாடுங்கள்’ என்று சொல்கிறாய்?”
“அதுவா, அவள் பாடும் போது மூன்று குரல் கேட்கிறதே, எப்படி ஒருமையில் சொல்வது?
=====
ராகவ் : கப்பல் படையிலே சேர்ந்திருக்கிறேயே உனக்கு நீந்த தெரியுமா?
மாதவ் : விமானப் படையிலே சேர்ந்திருக்கிறேயே உனக்கு பறக்கத் தெரியுமா?
=====
சிஷ்யன் : தலைவரே! அகலப்பாதை அமைக்கறதுல நாம ஊழல் செஞ்சதா ஆளுங்கட்சிக்காரங்க வழக்குப் போட்டிருக்காங்க?
தலைவர் : வழக்குல இருந்து தப்பிக்க ஏதாவது “குறுக்கு பாதை” இருக்கான்னு பாரு!
=====
பெயிண்ட் ஏன் அழுகிறது.
பெயிண்டை அடிக்கிறோம் இல்லையா. அதான்.
=====
“எனக்கு மட்டும் தனிமை ஏற்பட்டா போதும்... உடனே நான் பாட ஆரம்பிச்சிடுவேன்!”
“எதுக்கு அதெல்லாம்? நீங்க பாட ஆரம்பிச்சாலே ஆட்டோமேட்டிக்கா தனிமை ஏற்பட்டுடுமே
=====
சாப்பிட வந்தவர் : “என்னய்யா பேப்பர் ரோஸ்ட் கசங்கி இருக்கு?”
சர்வர் : “வேஸ்ட் பேப்பர்லே போட்டது சார்.”
======
“நம்ம ராமசாமிக்குத் தலைவர் மேலே அபார பக்தி!”
“எப்படி சொல்றே?”
“தீபாவளி அன்னைக்கு அவன் குளிச்சானோ இல்லையோ, தலைவரோட சிலைக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டியிருக்கான்!”

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer, Ph:9442282076
Date: 2008.03.14 09:59:52 +05'30'

'டாக்டர்! மனுஷனோட உயிர் போற நிமிடங்களை நாங்க நேரடியா டெலி-காஸ்ட் பண்ணனும்னு ஆசைப்படறோம்!''
''அதுக்கு நான் என்ன செய்யணும்?''
''நீங்க பேஷண்டுக்கு ஆபரேஷன் பண்ணும்போது சொன்னீங்கன்னா, கேமராவோட வந்துடுவோம்!''
=====
எங்க அப்பாவுக்கு எதிலேயும் குழப்பம்தாண்டா.
ஏண்டா?
பட்டாசையெல்லாம் கொலுப்படியிலே வரிசையா வெச்சுட்டு பொங்கலோ பொங்கல்னு கூச்சல் போடறாரு.
======
ஆசிரியர் : பாம்புக்கடிக்கு முதலுதவி என்ன தெரியுமா? கடிவாய்க்கு மேலும் கீழும் அழுத்தமாக ஒரு கயிற்றால் கட்டுப்போட வேண்டும்.
சுந்தர் : தொண்டையிலே பாம்பு கடிச்சாலும் இதே மாதிரி செய்யலாமா சார்?
ஆசிரியர் : ?????????????
=====
விருந்தாளி: 'தாஜ்மஹால்' எங்கே இருக்கு, சொல்லு பார்க்கலாம்.
சிறுவன்: 'ஆக்ரா'விலே...
விருந்தாளி: வெரிகுட். சார்மினார் எங்கே இருக்கு சொல்லு பார்க்கலாம்...
சிறுவன்: அதோ உங்க 'பாக்கெட்'லே
=====
நண்பர்: பையன் என்ன செய்யப் பேறான்.
தந்தை: மேலே படிக்கப் போறான்.
நண்பர்: டாக்டருக்கா, என்ஜினியருக்கா?
தந்தை: நீங்க ஒண்ணு. மாடி மேலே போய் நாவல் படிக்கப் போறான்.
=====
ஒரு மாணவன்: சினிமாவுக்குப் போகலாமா? பீச்சுக்குப் போகலாமா?
மற்றொருவன்: வேண்டாம், படிக்கப் போகலாம்.
மூன்றாமவன்: காசை சுண்டிப் பார்ப்போம். தலை விழுந்தால் சினிமா, பூ விழுந்தால் டிராமா. நேராக நின்றால் படிக்கப் போகலாம்.

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:00:27 +05'30'

ஒருவர் : நாங்க தர்ற நோட்டுக்கு ரெண்டு மடங்கு நோட்டு தருவோம்னு சொன்னீங்க. நாங்க குடுத்ததைத் தான் நீங்க குடுத்திருக்கீங்க?
மற்றவர் : நீங்க பத்து 100 ரூபா தந்தீங்க. நான் இருபது 50 ரூபா நோட்டு தந்துட்டேன்ல.
=====
மாதேஷ் : ஒருவனுக்கு குளிர்தாங்கவில்லை. அதனால பத்து போர்வையைப் போர்த்தியும் குளிர் அடங்கலை ஏன்?
ராஜேஷ் : தெரியலையே?
மாதேஷ் : அவர் போர்த்தியெதெல்லாம் ஈரமான போர்வைகள்?
=====
சாதாரணமானவர்கள் டைனிங்டேபிளை பிளைவுட்லே செய்வாங்க. அதையே நடிகர் நடிகைகள் எப்படி செய்வார்கள்?
ஹாலிவுட்லே செய்வாங்க.
=====
''எனக்கு எப்ப உடம்புக்கு வந்தாலும் நான் உங்ககிட்டேதான் டாக்டர் வருவேன்!''
''காரணம்...''
''உங்களுக்கு வர்ற ஒரே ஒரு பேஷன்ட்டை அவ்வளவு சீக்கிரம் சாகடிக்க மாட்டீங்கங்கற நம்பிக்கையிலதான்!''
=====
மனைவி : '''ராம ஜெயம்'னு எழுதறதுக்குப் பதிலா 'ரமாஜெயம்'னு நம்ம பையன் தப்பா எழுதறாங்க.''
கணவன் : ''அவன் சரியாத்தாண்டி எழுதறான்! பக்கத்து வீட்டுப் பொண்ணு ரமாவை நினைச்சு அப்படி எழுதறான்.''
=====
'என்ன சார் தலை கொழுக்கட்டை மாதிரி வீங்கியிருக்கு?''
''இனிமே ' அடிக்கவே மாட்டேன்'னு என் மனைவி தலையில அடிச்சு சத்தியம் பண்ணினா!''
=====
என்னங்க இது, நாம காஷ்மீருக்குப் போறதுக்கு ஒரே ஒரு டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கீங்க?
அடடே! சந்தோஷத்திலே என்னையே மறந்துட்டேன்.

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer, Ph:9442282076
Date: 2008.03.14 10:01:03 +05'30'

மகன்: அப்பா ஒயர்லேயே பாம்பு செஞ்சிட்டேன் பாருங்க.
அப்பா : வெரிகுட் கண்ணா, உனக்கு ஒயர் எப்படிக் கிடைச்சிதுஉ
மகன் : நம்ம கார்லேயிருந்த பிரேக் ஒயர்தான்... பிடுங்கி எடுத்திட்டேன்.
====
சங்கீத ஆசிரியர்: எங்கே... சா... பாடு...?
மாணவி: சாப்பாடு போடறதா ஒத்துக்கலியே! உங்களுக்கு மாசச் சம்பளம் தானே பேசினாங்க, எங்கம்மா'
=====
"என்னடா, சிரிச்சுக்கிட்டே போறே?"
"யாரும் பார்க்கிறதுக்குள்ளே, ஸ்டாம்ப் ஒட்டாத கடுதாசியை தபால் பெட்டியிலே போட்டுட்டு வந்துட்டேன்!"
=====
பெண் டைப்பிஸ்ட் : சார்! இந்த ஸ்டோர் சுப்ரமணியைப் பாருங்க சார் ! டைப் ரைட்டிங் ரிப்பன் வேணும்னு கேட்டா ! தலைக்கு வெச்சுக்கற ரிப்பன் வாங்கிக் கொடுத்திருக்காரு .
=====
ஒருவன்: சே! எங்க அப்பா ரொம்பக் கஞ்சன்!
மற்றவன்: ஏன் அப்படி?
ஒருவன்: பின்னே என்னடா. எனக்கு பேதி மருந்து வாங்கித் தர கஞ்சத்தனம் பண்ணிட்டு, நடு ராத்திரியிலே எழுப்பி பேய்க்கதை சொல்றாரு.
=====
பாபு : நம்ம கிரிக்கெட் டீம் அபாரமா ஜெயிடுச்சிடுச்சின்னு எதுக்குடா பொய் சொன்ன?
கோபு : சாரி, மன்னிச்சுக்கடா... உன்னோட விக்கலை நிறுத்தத்தான் அப்படி ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்.
=====
தந்தை: ஒரு ரூபாய் கொடுத்து தொன்னூறு பைசாவுக்கு டிக்கெட் வாங்கறே, கண்டக்டர் உன்னிடம் எவ்வளவு மீதி தருவாரு?
மகன் : சில்லரை இல்லேன்னு சொல்லிடுவாரு.
======
அவன் : எனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா?
போஸ்ட்மேன் : உங்க பெயர் என்ன?
அவன் : அது தான் கடிதத்தின் மேலேயே எழுதி இருக்குமே.
======
"பால்காரர் ஏன் டான்சரையும் பாடகரையும் வீட்டிலேயே சம்பளம் குடுத்து வச்சிருக்கார்?"
"ஆடிக் கறக்கற மாட்டை ஆடிக் கறக்கறதுக்கும், பாடிக் கறக்கற மாட்டைப் பாடிக் கறக்கறதுக்கும்தான்!"

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:01:38 +05'30'

ரம்யா: எங்க அப்பா பத்து வருஷமா வியாபாரம் பண்றாரு ஆனா சேமிப்பே இல்லை.
கீதா: என்ன வியாபாரம்?
ரம்யா : சேமியா வியாபாரம்.
====
திருடன்: (சிறுமியிடம்) பாப்பா! நியை மிட்டாய் தருகிறேன்! உங்கள் வீட்டில் நகைகளை எங்கே வைப்பாங்க, சொல்லு!
சிறுமி: அடகுக் கடையிலே!
====
“உன் அப்பா ஒரு ஸ்கூட்டரை ரூ.4000க்கு வாங்கி ரூ.7000க்கு விற்றால், அவருக்கு கிடைத்த லாபம் ரூ. 100 தான் என்று கணக்குப் போட்டிருக்கியே, எப்படி?”
மீதி ரூ.2900 ஐக் கணக்கில் காட்டுவது அவர் வழக்கமில்லை.
=====
ஒருவன்: அந்தக் காலத்திலே பத்திரிகைகளை ஆதரித்த அரசன் யார் தெரியுமா?
மற்றவன்: ‘சந்தா’ சாகிப்!
=====
வேல்: ஏண்டா தண்ணியில பச்சை இங்கை ஊத்திக் கலக்குற?
ராஜா : டாக்டர்தான் மாத்திரயைப் பச்சைத் தண்ணியில் குடிங்கள்னாரு அதான்.
====
காட்டு ஆமை : நீ கூப்பிடற அந்தப் படத்துக்கு மட்டும் என்னால வர முடியாது.
கிராம ஆமை : ஏன்?
காட்டு ஆமை : அதுதான் “நாட்டாமை” ஆச்சே.
=====
கப் போர்டு செஞ்சுட்டே, அடுத்து என்ன செய்யப் போறே.
சாஸர் போர்டு தான்.
=====
“நீங்க போன பந்தியிலேயும் உட்கார்ந்த மாதிரி தெரிஞ்சுதே?”
“என்ன பண்றது... பொண்ணு, மாப்பிள்ளை ரெண்டு வீட்டுக்கும் நான் தெரிஞ்சவனா போயிட்டேனே!’
=====
ஜோதிடர் : “உங்க கை ரேகைப்படி இப்ப கொஞ்சம் பணத்துக்கு கஷ்டமாத்தான் இருக்கும்! ஒரு ஆறு மாசத்துக்குப் பல்லைக் கடிச்சிக்குங்க... அதுக்கப்புறம் கொட்டோ கொட்டுனு கொட்டும்.
ஜோதிடம் பார்க்கவந்தவர் : “எது..... பல்லா?”

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:02:12 +05'30'

“கோயில்ல இருந்த விநாயகர் விக்ரஹத்தை எதுக்குய்யா திருடினே?”
“இதுதான்ய்யா எனக்கு முதல் திருட்டு. அதான் பிள்ளையார் சுழியா இருக்கட்டுமேன்னு அதைத் திருடினேன்!”
=====
நாங்க எடுக்கப் போற புதுப்படத்துக்கு நாளை பூஜை போடுறோம். சகஸ்ரநாம அர்ச்சனை  பண்ணி ஆரம்பிக்கிறதா இருக்கோம் சார்.
அப்படியா, அதுக்கு நான் என்ன செய்யணும்?
நீங்க ஓர் அர்ச்சனை டிக்கெட் வாங்கிக்கணும். ஒரு டிக்கட் ஐம்பது ரூபாய். படம் ரிலீஸ் ஆனா பால்கனி டிக்கெட் ஒண்ணு இனாமா தருவோம்.
=====
“கச்சேரியில நான் முதல் பாட்டைப்பாடி முடிச்சதும், ரசிகர்கள் எல்லாரும் விடாம கைதட்டினாங்க!”
“அடுத்த பாட்டை நீங்க ஆரம்பிச்சிடக்கூடாதேங்கிற பயத்துலதான்!”
=====
என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம்.
இப்பவாவது புரியுதா நான் ஏன் ஜாதகத்தைப் நம்பறதில்லேன்னு.
=====
கலா : ஒரு நாளைக்கு நான் ஒரு பொய்தான் சொல்லுவேன்
மாலா : அப்படியா அப்ப இன்னிக்கு கோட்டா முடிஞ்சு போச்சா?
=====
ராமு: ஏண்டா சீனு, உங்கப்பா எங்கேடா வேலை பார்க்கறார்?
சீனு: ‘கோச்’ பாக்டரியிலே ‘வாச்’மேன். அது சரி, உங்கப்பா என்ன செய்யறார்?
ராமு: ‘வாச்’ பாக்டரியிலே ‘கோச்’மேன்.
=====
“ஏன்டா, பொய் சொன்னே? ‘இனிமேல் இப்படி பொய் சொல்லமாட்டேன்’ என்று சொல்லு! சொல்லுடா! ’ என்று முதுகில் இரண்டு வாங்கினார், தகப்பனார்.
“இனிமேலும் பொய் செல்லுவேன் அப்பா! என்றான் சிறுவன் அழுதுகொண்டே!”
தந்தை திகைத்துப் போய் அடிப்பதை நிறுத்திவிட்டுக் கேட்டார்.
“ஏன்டா, இப்படிச் சொல்கிறாய்? இவ்வளவு அடி வாங்கியும் புத்தி வரவில்லையா?”
பையன் நிதானமாகச் சொன்னான். “இனிமேல் பொய் சொல்லமாட்டேன் என்று சொன்னால், அது பொய் இல்லையா, அப்பா?”
=====
“ஐப்பசியில் எல்லோருக்கும் ஓசி டிபன் கிடைக்கும்!”
“எப்படி?”
“ஐப்பசியில் ‘அடை’ மழை பெய்யுமே!”

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer, Ph:9442282076
Date: 2008.03.14 10:05:28 +05'30'

டாக்டர்: இந்த மருந்தை நல்லா மூணு, நாலு தடவை குலுக்கி குடிங்க,
லாட்டரிப் பைத்தியம் : இந்த 'குலுக்கல்' லயாவது பரிசு விழுமா டாக்டர்?
=====
அவன் ஏன்டா "திரு திரு" ன்னு முழிக்கிறே?
இவன் : சரி இனிமே 'மரியாதை'யா முழிக்கிறேன்.
=====
இன்னிக்கு நான் வந்தது நியூ சென்ஸா இருக்குங்கறயே, அப்போ நேத்து வந்தது?
ஓல்டு சென்ஸா இருந்தது.
======
ஒருவர் : கடி எழுதினவருக்கு என்ன பரிசு கொடுத்தாங்களாம்?
மற்றவர் : நாய்க்குட்டி
ஒருவர் : ஏன்?
மற்றவர் : அதுதான் நல்லாக் கடிக்குமாம்.
=====
கால் ஆண்டு தேர்வு முடிந்தது. அடுத்து?
என் கை ஆண்டு தேர்வு தான்.
=====
"மாப்பிள்ளை ஆபீஸ்ல என்னதான் லஞ்சம் வாங்கறவரா இருந்தாலும், கல்யாணப் பத்திரிகையில
இப்படி அப்பட்டமா போட்டிருக்கக்கூடாது"
"என்ன போட்டிருக்காங்க?"
" BRIDE GROOM அப்படின்னு போடறதுக்குப் பதிலா BRIBE GROOMன்னு போட்டிருக்காங்க!"
=====
காதலி : "நம் பெற்றோர் சம்மதித்தால் கல்யாணம்! இல்லையேல் தற்கொலை! சரிதானே அத்தான்?"
காதலன் : "இரண்டும் ஒன்றுதான்."
=====
"எனக்கு இன்னைக்கு முக்கியமான வேலை இருக்கு. அதனால அக்கம்பக்கத்து சமாச்சாரங்களை இந்த
கேஸட்ல பதிவு பண்ணிக் கொண்டு வந்திருக்கேன். போட்டுக் கேட்டுக்குங்க அம்மா!"
=====
பெண்ணை நீங்க வந்து தாராளமா பாத்துட்டுப் போகலாம். ஆனால் ஒரு கண்டிஷன்.
என்ன?
பெண் பிடிச்சிருக்கிறது என்று சொன்ன பிறகுதான் சொஜ்ஜியும், பஜ்ஜியும் பரிமாறுவோம்.

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:06:00 +05'30'

ஓர் இளம் பெண்ணும், ஓர் இளைஞனும் பேசிக் கொண்டது:
நான் உண்மையிலேயே ரொம்ப அழகா இருக்கேன் இல்லையா?
ஆமாம்.
என் ஹேர் ஸ்டைல் இன்னிக்கு ரொம்பப் பிரமாதம் இல்லை.
ம்....
நான் இன்னிக்குப் போட்டுக்கிட்டிருக்கிற காது வளையம் ரொம்ப ஜோரா இருக்குது இல்லே?
ம்....
இந்த லேட்டஸ்ட் லிப்ஸ்டிக் போட்டவுடனேயே, எனக்கு ஒரு புது களை வந்துடுது! என்ன சொல்றீங்க'
ம்...ம்....
என் நகைகூட ஒரு தனி ஸ்டைல்தான்! அப்படித்தானே?
ம்....
போங்க! ஆனாலும் நீங்க ரொம்பதான் என்னை வர்ணிக்கிறீங்க.
======

நோயாளி : டாக்டர் வெள்ளரிக்கா சாப்பிட்டுப் பார்த்தேன் ! கையில மருதாணி இட்டுக்கிட்டுப் பார்த்தேன் ! கண்ணுல விளக்கெண்ணெய் தடவிப் பார்த்தேன். ! அப்பக் கூட உடம்பு குளிர்ச்சியே ஆக மாட்டேங்குது
டாக்டர் : பேசாம ஃபிரிட்ஜ்க்குள்ள உட்கார்ந்து உள்பக்கமா பூட்டிக்குங்க.
=====

''பக்கத்துக் கிளாஸ்ல நம்ப புரொபசர் ஜோக் அடிக்கிறார்னு நெனைக்கிறேன்''
''எப்படித் தெரியும்?''
''பசங்க எல்லாம் 'சைலண்ட்'டாக இருக்காங்க பார்.''
=====
''இதென்னடா, 'போனஸ்' என்பதற்குப் பதில் ''பேனஸ்'' என்று எழுதியிருக்கிறாய்?''
''அது தான் உங்கள் ஆபீஸில் போனஸ் தராமல் காலை வாரி விட்டுட்டாங்களே!''
=====

கம்பவுண்டர் : ஹார்ட் பேஷண்ட் மூணுபேர் நம்ம ஆஸ்பத்திரியில திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்து செத்துட்டாங்க.
டாக்டர் : மூணுபேரும் எப்படி ஒரே செத்தாங்க ?
கம்பவுண்டர் : நர்ஸ் மாலதிக்கு கல்யாணம் நிச்சயமான விஷயம் அந்த மூணு பேருக்கும் தெரிஞ்சு போச்சாம்.

மகேஷ் : என்னை இங்கிலீஷ்ல புலினு எல்லோரும் பாராட்டுவாங்க.
ரமேஷ் : அதெப்படி? இங்கிலீஷ்ல டைகர்-னுதானே பாராட்டனும்.
=====
சிலந்தி 1 : அந்த சிலந்திப் பூச்சிக்கு ஏன் இவ்வளவு தற்பெருமை?
சிலந்தி 2 : வெப் சைட் ஆரம்பிச்சிருக்காம்.
=====
அவள் : நீ நாளுக்கு நாள் குண்டாகிக் கொண்டே போகிறாய், நீச்சல் அடித்தல் இளைத்து விடுவாய்.
இவள் : இது எப்படி திமிங்கிலம் சமுத்திரத்திலேயே தான் 24 மணி நேரமும் இருக்கு. அது இளைத்தா இருக்கு.
=====
''டாக்டர்... நீங்க சொன்ன மாதிரி என் கணவர் தினமும் வாக்கிங் போனதால துரும்பா இளைச்சுப் போயிட்டார். மறுபடியும் அவருக்கு சதை போட என்ன வழி டாக்டர்?''
''ரிவர்ஸ்ல நடக்கச் சொல்லுங்க''
=====
மனைவி : ''அத்தான் பல்லை வலிக்குது.''
கணவன் : ''ஏன்? என்னத்தை அப்படி வலுவா கடிச்சே?''
மனைவி : ''உங்க அம்மாவைத்தான்.''
=====

''எங்கப்பா மாதிரி நானும் ஒரு கலெக்டர் ஆகணும்னு ஆசைப்பட்டேன்!''
''அப்படின்னா, உங்க அப்பா கலெக்டரா?''
''இல்லை... அவரும் கலெக்டர் ஆகணும்னு ஆசைப்பட்டாராம்!''
=====
நடிகை ரமாவோட திருமணத்துக்கு பத்திரிகை நிருபர்கள் யாருமே போகலே.
ஏன்? அவங்களுக்கு என்ன கோபம்?
அப்பா - அம்மா பார்த்து மாப்பிள்ளையை பகிரங்கமா இன்விடேஷன் போட்டு எல்லார் முன்னிலையிலேயும் முறைப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களேங்கிற கோபம்தான்.
=====
''பொண்ணு 'கிளி' மாதிரி இருக்காளேன்னு, தெரியாத்தனமா கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்!''
''என்னாச்சு?''
''பேசினதையே திரும்பத்திரும்பப் பேசி, என் பிராணனை வாங்கிகிட்டிருக்கா!''

இரு சங்கீத வித்வான்கள் பேசிக் கொண்டது
எனக்கு மேடை ஏறி கச்சேரி செய்யிறதைவிட, ரேடியோவிலே கச்சேரி செய்யிறதுதான் ரொம்பப் பிடிக்கும்...
ஏங்க அப்படி?
அப்பத்தானே மேலே கல்லு வந்து விழாது.
====
ஆசிரியர் : கும்பகர்ணன் மாதக் கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?
மாணவி : கொசுவே இல்லாத காலம் சார்...
=====
''ஏண்டா ராஜூ, உங்க பள்ளியில் ஓட்டப் பந்தயம் என்றாயே, உனக்குப் பரிசு கிடைத்ததா?
''பயந்தாங்கொள்ளிப் பசங்க. எனக்குப் பயந்து கொண்டு எல்லா பசங்களும் எனக்கு முன்னால் ஓடிப் போயிட்டாங்க!'
====
''அம்மா, நான் பக்கத்து வீட்டு ரீட்டாவோட விளையாடட்டுமா?''
''வேண்டாம். அவ அம்மாவை எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது!''
''அப்போ, நான் அவகூட சண்டை போடட்டுமா?''
=====
ஒரு வக்கீல் : நீங்க முழு மோசக்காரர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும் .
மற்றொரு வக்கீல் : நீர் பொய் சொல்கிறவர் என்று எனக்குத் தெரியும்.
நீதிபதி : சரி, இப்போது ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டு விட்டீர்களா ! இனி கேஸ் விஷயமாகப் பேசலாம்.
====
பாமா : அவருக்குத் திருமணம் ஆயிடுச்சு. ஆனா இன்னும் படிச்சிட்டு இருக்கார்.
ஹேமா : அப்ப திருமண மாணவர்னு சொல்லு.
====
ராம் : ஸ்பின் பவுலர்னா கையை யச் சுழற்றி தானே பந்து வீசுவாங்க. இவர் என்ன கால் ரெண்டையும் பின்னிகிட்டு வித்தியாசமா பந்து வீசறார்.
ஷாம் : இவருதான் லெக் ஸ்பின்னர் ஆச்சே!

டாக்டரின் பையன் : அப்பா நாளை முதல் வேலைய என் தலையை ஒரு தரம் எக்ஸ்ரே எடுத்து பார்த்துடுப்பா.
டாக்டர் : எதுக்குடா-
பையன் : வாத்தியார் எப்ப பார்த்தாலும் முளை இல்லாதவன்னு சொல்லிண்டு இருக்காரே.
=====
''என்னங்க... நம்ம குக்கர் விசில் அடிக்க மாட்டேங்குதுங்க...''
''அதுக்கு நான் என்னடி செய்யணும்?''
''சாதம் வெந்ததும், நீங்க விசில் அடிங்க!''
=====
டீச்சர் : ''அக்கால ஆட்சிமுறைக்கும் இக்கால ஆட்சிமுறைக்கும் உள்ள வித்தியாசம் யாது?''
சிறுமி : ''அக்காலத்தில் கல்வெட்டுமுறை இருந்தது! இக்காலத்தில் கட்-அவுட் முறை உள்ளது.''
====
''உன் காதலனோட வெளியூர் லாட்ஜ்ல ரெண்டு நாள் தங்கிட்டு வந்ததா சொன்னியே, அவர் உன்னை கல்யாணம் பண்ணிக்குவாரா?''
''ச்சீ... போடி... இதைப் போய் அவர்கிட்டே எப்படி வெட்கத்தை விட்டுக் கேக்கறது?''
=====
உங்க பொண்ணுக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டீங்களாமே?
மாப்பிள்ளையை எங்கே வலை போட்டு பிடிச்சீங்க?
அம்பாசமுத்திரத்திலே.
=====
'ஏண்டா சோகமா இருக்கே?''
''என் மனைவி கார் டிரைவரோட ஓடிட்டா!''
''இதுக்கா கவலைப்படறே... வேறொரு கார் டிரைவர் கிடைக்காமலா போயிடுவான்!''
=====
இரு நண்பர்கள் பேசிக் கொண்டது
சுந்தரம் வீட்டுக்கப் போயிடாதே! அவன் சுத்துக் கஞ்சப் பையன்?
ஏன்?
வீட்டிலே இருக்கும்போது, டிரஸ்கூட போட்டுக்கமாட்டான்.

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:06:42 +05'30'

''டாக்டர் எந்த சந்தர்ப்பத்தையும் நல்லாப் பயன்படுத்திக்குவார்.''

இருக்கட்டுங்க. அதுக்காக பேஷண்டை நாக்கை நீட்டச் சொல்லிப் பார்த்துட்டு அதிலேயே ஸ்டாம்பை நனைச்சு கவர்ல ஒட்டறது நல்லாவா இருக்கு.

=====

நிருபர் : நாட்டில் நடக்கிற திருட்டு , கொள்ளை அதிகமாகிறதே ! அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?

ஐ.ஜி. : ப்ளீஸ் ! தயவுசெய்து அரசியல் சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்காதீர்கள்.

=====

'மண்டு, மண்டு என்று வாத்தியார் திட்டிக்கொண்டிருப்பாரே, அந்த சோமு இப்போது என்ன செய்கிறான்?''

''டயமண்டு வியாபாரம் செய்கிறான்.''

=====

''பெரிய பிளாஸ்க் இருந்ததே, அதை தம்பி உடைச்சிட்டான் அப்பா.''
''இப்போ படீரென்று சத்தம் கேட்டதே, அது தானா?''
''அது, அம்மா தம்பியை அறஞ்ச சத்தம் அப்பா!''

====

டாக்டர் : யார் இங்கே ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறது ? அவரைத்தான் முதலில் கவனிக்கப் போகிறேன்.

மளிகைக் கடைக்காரர் : நான்தான் சார் ! ஒரு மாதமாகக் காத்திருக்கிறேன் . நீங்க மளிகைக்கடைக்கு கொடுக்க வேண்டிய பாக்கிக்காக .

=====

பையன்: ஏம்ப்பா, என்னை, இலவசக் கல்விப் பள்ளிக்கூடத்திலே தானே சேர்த்திருக்கே?...
தந்தை: எப்படிடா கண்டுபிடிச்சே?
பையன்: ஆறு மாசமா பள்ளிக்கூடத்திலே, 'டங்கா, டமாரம், டப்பி,' பாடம் தான் நடத்திக்கிட்டிருக்காங்க.

=====

சாப்பிட வந்தவர்: ஏங்க ஓட்டல் வாசல்ல ஒரு வந்தவர் நாயை நிக்க வச்சிருக்கீங்க.

முதலாளி : கை கழுவத் தண்ணி இல்ல சார். பயப்படாம அதுகிட்ட கையை நீட்டுங்க 'க்ளீன்' பண்ணிடும்.

கோபால் : என் பையன் வெட்டிப் பொழுது போக்கறான். அவன நெனச்சாத்தான் கவலையா இருக்குப்பா

தனபால் : அப்ப டெய்லர் கடையோ, சலூனோ வச்சுக் கொடேன்!
கோபால் : ??????????
=====
அவள் : உன் குழந்தை நடு இரவில் எழுந்து அழுதால் யார் முழித்துக் கொள்வார்கள்-
இவள்: பிளாட்டில் உள்ள எல்லோருமேதான்.
=====
''உங்க ஸ்கூல் எப்படி நடக்குது?''
'' 'ஃபீஸ் ஃபுல்'லா இருக்கு!''
=====
அப்பா : ''நம்ம வீட்டுக்கு உன்னைப் பார்க்கறதுக்கு அடிக்கடி வருவானே ஒரு பையன்! அவன் இனிமே இங்கே வரமாட்டான்.''
பெண் : 'ஏம்பா? என்ன நடந்தது?''
அப்பா : ''நூறு ரூபாய் கடன் கொடுத்திருக்கேன்.''
======
''ஏன்ய்யா... அந்த ஆளு தலையில ரெண்டு தட்டு தட்டுனேன்னுதானே சொன்னேன், எப்படியா செத்துப் போனான்?''
''நான் தட்டுனது கடப்பாறையால பாஸ்!''
=====
உன் காதலி உனக்கு மோதிரம் பரிசு கொடுத்தானாமே. என்ன சொல்லிக் கொடுத்தா.
நாலுபேரு கைமாறி உங்ககிட்டே வந்திருக்கிறது. அதிர்ஷ்ட மோதிரமுன்னு
=====
''தம்பி... நீ காட்டிலே தனியா நடந்து போய்க்கிட்டிருக்கே... நள்ளிரவு... கும்மிருட்டு... அப்போ, ரொம்ப ஆவேசமா உன்னை நோக்கி ஒரு சிங்கம் ஓடி வருது... அப்ப நீ என்ன செய்வே?''
''நான் என்ன சார் பண்ண முடியும்? எல்லாம் அந்த சிங்கம் தான் பண்ணும்!''
சொன்னா.!

நோயாளி : என்னோட நோயைப் பற்றி உங்களுக்கு என்ன தோணுது டாக்டர்

டாக்டர் : ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிக்கும் முன்னாடியே ஃ பீஸை வாங்கிடறது நல்லதுன்னு தோணுது.

=====

''டேய், என் சைக்கிளில் பெல் இல்லை. நான் சொல்லும்போது உன் சைக்கிளில் உள்ள பெல்லை அடி.''

''டேய், என் சைக்கிளில் பிரேக் இல்லை. நான் சொல்லும்போது உன் சைக்கிளில் உள்ள பிரேக்கைப் பிடி.''

====

'உன் கூடப் பிறந்த தம்பி தானேடா! ஒரு சுளை கொடுக்கக்கூடாதா?''

''அதற்குத்தான் நான் கொட்டையையெல்லாம் கொடுத்திட்டேனே? அதை நட்டு மரம் வளர்ந்ததும் எல்லா பழத்தையும் அவனே எடுத்துக்கட்டும்!''

=====

நோயாளி : ராத்திரி படுத்தா தூக்கம் வரமாட்டேங்குது டாக்டர் .

டாக்டர் : எப்படி வரும் ! ஆபீஸ்லதான் உட்கார்ந்தபடி தூங்கிப் பழகிட்டீங்களே.

=====

திருடன்: (மகனிடம்) ஏண்டா, இன்னும் பள்ளிக்கூடத்துக்கு கிளம்பாமல் இருக்கே?

பையன்: பக்கத்துவீட்டு சோப்பை இப்போது தானே எடுத்துக்கிட்டு வந்தேன். குளிச்சிட்டுப் புறப்படறதுக்கு கொஞ்ச நேரம் ஆகும்.

====

எமன் : சித்திரகுப்தர் அங்கே என்ன சப்தம்?

சி.குப்தன் : புதிதாக எமலோகம் வந்திருக்கும் மானிடர்களை இங்கே ஏற்கனவே இருப்பவர்கள் ராகிங் செய்கிறார்கள் பிரபோ.

அருண்: டேய் நான் டி.வி.யில தெரிஞ்சேன்டா
தருண் : எத்தனை மணிக்குடா?
அருண் : சாயங்காலம் ஐந்தரை மணிக்கு
தருண் : அப்பத்தான் கரண்ட் இல்லையே?
அருண் : டிவி.ஆஃப் பண்ணியிருந்தப்ப டி.வி.யில இருக்குற கண்ணாடியில தெரிஞ்சேண்டா.
======

என்னைக் காதலிக்கிறாயா டியர்?
ஆமாம் டியர்
எனக்காக நீ இறந்து போவாயா?
மட்டேன், என்னுடையது இறவாக் காதல்.
======'

'நீங்களும் அந்த டைரக்டரும் கல்யாணம் பண்ணிக்காமலே குடும்பம் நடத்துறதுக்குக் காரணம்...''
''விவகாரத்துங்கற தொல்லை வராதே!''

======
நண்பர் : ''உங்க தேர்தல் போஸ்டர்லே ஏன் எருமை மாடு போட்டோ போடச் சொல்றீங்க?''
அரசியல்வாதி : ''யாராவது சாணி அடித்தாலும், மாடு போட்ட மாதிரி தத்ரூபமா இருக்கட்டுமேன்னுதான்.''
=======

''அந்த ஆளு பாவம்... அவருக்கு வாழ்க்கையில அடிமேல அடி விழுதாம்!''
''அப்படியா? என்ன தொழில் பண்றாரு?''
''ஸ்டன்ட் நடிகர்!''
======

என்ன, அந்த தரகர் பொண்ணோட நிறம், உயரம், படிப்பு, குணம் இதைப் பத்தியெல்லாம் சொல்லாமல், அவளுக்கு முப்பத்திரெண்டு பல்லுங்கள்னு, பல்லைப் பத்தி மட்டும் சொல்றாரு.
அவரு இதுக்கு முன்னாடி மாட்டுத் தரகரா இருந்தவராம்.
======

''டாக்டர்! என் கண்ணுக்கு சித்ரகுப்தன் தெரியரான்!''
''இப்பத்தானே ஆபரேஷனை ஆம்பிச்சிருக்கேன்! இன்னும் கொஞ்ச நேரத்துல எமதர்மன் தெரிவான்!''

தொண்டன் : சொன்னால் கேளுங்க
தலைவரே.
தலைவர் : என்ன ?
தொண்டன் : என்னதான் இருந்தாலும் உங்க
பிறந்த நாளைக்கு உங்கள் சிலைக்கு
நீங்களே மாலை போடுறதுதான்

====

ஆசிரியர் : தண்ணியில என்னென்ன
இருக்கு. சொல்லு பார்ப்போம் ?
மாணவன் : குடிக்கற தண்ணியிலையா ?
போடற தண்ணியிலயா சார் ?

====

ஒருவர் : மேடையில பேசறப்ப நம்ம தலைவரு
நிறைய சோடா குடிப்பாருங்கறது உண்மை தான்
அதுக்காக இப்படியா?
மற்றவர் : என்ன ஆச்சு?
ஒருவர் : அவர் சிலையும் சோடா குடிக்கிற
மாதிரி செஞ்சுட்டாங்க.

“டேய், உனக்குத் தெரியுமா? நான் பலசாலியா ஆகணும்னு தினமும் அயர்ன் டானிக் சாப்பிடறேன். அப்புறம் தினமும் நீச்சல் பழகறேன்.”

“ஐயயோ! ஜாக்கிரதையா இரு. துருப்பிடிச்சுப் போயிடப்போறே?”

=====

ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வான நீங்க நினைச்சா முடியாத காரியம்னு ஒண்ணு உண்டா? அதுக்காக எட்டாவது பெயிலான உங்க மகனுக்கு எம்.பி.பி.எஸ். சீட்டு வாங்கித் தாங்கன்னு சொன்னா எப்படி?

====

“கிராமத்துலே மாடு மேய்ச்சுக்கிட்டு, உருப்படாம திரிஞ்சானே நம்ம திருஞானம்... அவன் இப்ப துபாய்க்குப் போயி... ஒட்டகம் மேய்ச்சு பணக்காரனாயிட்டான்!”

"தலைவரே, உங்களுக்கு கொடுத்த 'டாக்டர்' பட்டத்தை வீட்டு வாசல்ல உள்ள போர்டுல போடாதீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா?"

"என்னாச்சு?"

"அந்தப் போர்டைப் பாத்துட்டு, வர்ர நோயாளிங்க கூட்டத்தை சமாளிக்க முடியலை!"

====

மாப்பிள்ளை : மாமா! நீங்க கல்யாணத்தை ரொம்ப சிக்கனமா பண்ணுங்க . வேணாங்கலை. அதுக்காக ஜானவாசத்துல காருக்குப் பதிலாக நீங்க என்னை உப்பு மூட்டை தூக்கிண்டு போறது அவ்வளவு நல்லா இல்லே.

====

அரசியல்வாதி மேடையில் பேசிக் கொண்டது:

"கொஞ்சங்கூட வெட்கம் இல்லாமல் என்னிடம் கணக்கு கேட்கிறாயே, பதிலுக்கு நான் உன்னிடம் சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் கேட்டால் உன் கதி என்ன ஆகும்?"

ஓட்டலில் உட்கார்ந்திருப்பவர் சர்வரிடம்
ஏம்பா தம்பி, இப்ப டைம் என்னாச்சு?
அந்த டேபிளுக்கு நானில்லைங்க! வேற ஆள்
வருவார் அவரிடம் கேளுங்க.

====

"தலைவர் தமிழ்ல தானே பேசப் போறாரு!
எதுக்காக கூடவே மொழிபெயர்ப்பாளர்
வந்திருக்கிறார்?"
"தலைவர் பாக்கு போட்டுகிட்டே பேசறதுனால
பொது மக்களுக்குப் புரியாதாம். அதான் இப்படி
ஓர் ஏற்பாடு!"

===

தொண்டன் : "என்ன தலைவரே, நீங்க ஆட்சிக்கு
வந்தா, 'குப்தர்களின் பொற்கால'
ஆட்சியமைக்கறதா மேடையில பேசினீங்களாமே.
தலைவர் : "எல்லாருடைய பெயரையும் சொல்லி
அவங்க அவங்க ஆட்சியமைக்கறதா
சொல்லிட்டாங்க. நான் யார் பெயரைத்தான்
சொல்றது."

Ramanathan
Digitally signed by Ramanathan
DN: cn=Ramanathan, c=IN, o=Commercial Taxed Dept Staff Training Institute,, ou=Computer Lecturer,, email=ctdsti@gmail.com
Location: Commercial Taxes Staff Training Institute, Computer Lecturer,Ph:9442282076
Date: 2008.03.14 10:07:47 +05'30'

“தலைவரே! ஐந்து வருஷத்துக்கு ஒரு தடவைதான் தொகுதிக்குப் போகணும்னு இருக்கீங்களே... என்ன காரணம்?”

“அப்பத்தான் புதுமுகம்னு நினைச்சு ஜனங்க மறுபடியும் ஓட்டுப் போடுவாங்க!”

====

ஒருவர் : தொண்டர்கள் கன்னம் எல்லாம் ஏன் வீங்கி இருக்கு?

மற்றவர் : தலைவர் ‘அறை’ கூவல் விடுத்தாரே அதான்.

====

அரசியல்வாதி : மாணவர்களே! அரசியலில் ஈடுபடாதீர்கள்.

மாணவர் : ஏன்?

அரசியல்வாதி : நாங்கள் யாராவது படிப்பில் ஈடுபடுறோமா?

“என்னது, மாலை போட்டவுடனே, தலைவரோட கழுத்துல இருந்து இரத்தம் கொட்டுது?”

“போட்டது பிளேடு மாலையாச்சே!”

====

“இந்தத் தேர்தல்ல தோத்துப்போனதைப் பத்திக் கவலைப்படாதய்யா! அடுத்த தேர்தல்ல நாமதான் ஆட்சியைப் பிடிக்கப் போறோம்!”

“அதுக்குள்ள ஆளுங்கட்சிக்காரங்க, இப்ப இருக்கிற கொஞ்ச நஞ்சம் புறம்போக்கு நிலத்தையும் வளைச்சுப் போட்டுடுவாங்களேங்கிற கவலைதான் தலைவரே எனக்கு!”

===

“தலைவரே! எப்போ பார்த்தாலும் மரத்து மேலேயே உட்கார்ந்துக்கிட்டிருக்காரே, யார் அவர்?”

“நம்ம கிளைச் செயலாளர்!”

====

“வட்டச் செயலாளர் பதவிக்கு ஏகப்பட்ட போட்டி இருந்துதே, எப்படி நம்ம ஏழுமலை அண்ணனை தேர்ந்தெடுத்தாங்க?”

“தலைவர், எல்லாரையும் சோடா பாட்டில் வீசச் சொன்னாராம். அதுல ஏழுமலை காட்டின திறமையைப் பார்த்து அசந்து போன தலைவர், உடனே புதவியைக் கொடுத்துட்டாராம்!”

நிருபர் : ''நீங்க புதுசா துவங்கியுள்ள கட்சிக்கு, கணக்கிலே சைபர் மார்க் வாங்கினவங்களை மட்டும்தான் சேர்க்கிறீங்களாமே.''
தலைவர் : ''ஆமா, அப்போதான் ஒருத்தரும் என்னைப் பார்த்துக் கணக்கு கேக்கமாட்டாங்க.''
======
கணவன் : வீட்டை விட்டு ஓடிப்பபோன நம்ம பையன் இப்போ போலீஸ் பாதுகாப்போட நிம்மதியா இருக்கேன்னு தபால் போட்டிருக்கான்.
மனைவி : எங்கேயிருந்து ?
கணவன் : வேலூர் ஜெயில்லேருந்து .
===
ஆசிரியர்: இந்த விடுமுறையில் பிறர் சந்தோஷப்படும்படி உங்களில் யாராவது ஒரு பையன் ஒரு காரியம் செய்திருக்கிறீர்களா?
மாணவன்: நான் செய்தேன். லீவுக்கு என் மாமா வீட்டுக்குப் போயிருந்தேன். லீவு முடிந்து நான் கிளம்பியதும் என் மாமா, மாமி எல்லோரும் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள்.
=====
''நீ வீட்டிலே காசு திருடுகிறதை நான் இப்பவே போய் உன் அம்மாகிட்டே சொன்னால், தெரியும். சேதி?''
''போய்ச் சொல்லேன். நான் எங்க வீட்டில் திருடியிருந்தால் தானே?''
====
என்ன சார் ! உங்க பெண்ணுக்கு இருபது வயசு இருக்கும் போல தெரியுது! எல்.கே. ஜி. யில சேர்க்க வர்றீங்களே ?
பதினெட்டு வருஷமா உங்க ஸ்கூல்லே சீட் தேடி அலையறேன் ஸார்.

எங்க ஸ்கூல் டிராமாவுக்கு அப்பா, அம்மாக்கள் மட்டும் வரலை; ஜனங்களும் வந்தாங்க- ஒரு சிறுமியின் பெருமை
====
அவர் : அந்த விஞ்ஞானிய சந்திரனுக்குப் போக அனுமதிக்கலையாம்.
இவர் : ஏன்?
அவர் : அவருக்கு மூன் அனுபவம் இல்லையாம்
====
சமையல் காரன் : உங்க வீட்டில நான் சமையல் செய்யணும்னா ஒரு கண்டிஷன்
முதலாளி : என்ன சொல்லு?
சமையல்காரன் : என்னையும் இங்க சாப்பிடுனு சொல்லக்கூடாது.
====
பணம் சம்பாதிக்க ஆயிரம் வழிகள் என்ற புத்தகத்தை எழுதியது நான்தான்
பிறகு ஏன் பிச்சை எடுக்கிறாய்?
அந்த ஆயிரம் வழிகளில் இது தான் முதல் வழி
====
'என்னங்க இது. வாஷிங் மெஷின் இவ்வளவு பெரிசா இருக்கு?''
''துணி உலர்த்த கொடியும் உள்ளே இருக்கு?
=====
'பாப்பா...! என் செல்லக்கண்ணு இல்லே! தாத்தாவுக்கு ஒரு முத்தம் கொடு....''
சிறுமி : ''போங்க தாத்தா! பாட்டி பார்த்தா தப்பா நெனப்பாங்க.''
====
என் காதலிகிட்டே 'ஓடிப் போயிடலாமா'ன்னு ஒரு பேச்சுக்குக் கேட்டேன்!''
''என்ன சொன்னா?''
''பைக்ல கூட்டிட்டுப் போறதுன்னா ஓ.கே. அப்படிங்கறா!''